பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 19] சென்னை: மார்கழி 12 (27—12—71) திங்கள் | வெளியூர்: மார்கழி 13 (28—12—71) செவ்வாய் [இதழ்: 162

தலைவர்களெல்லாம் வீட்டுக் காவலில்!

'நாட்டு நல நடவடிக்கை' என்கிறது பாகிஸ்தான்

கராச்சி, டிச. 27—
பாகிஸ்தானில் முக்கியமான தலைவர்கள் பலரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் இராவல்பிண்டியில் தெரிவித்தார்.

நாட்டு நலனைக் கருதி இவர்களை வீட்டுக் காவலில் வைக்க வேண்டியிருப்பதாக அவர் கூறினர்.

தோல்விக்கு யார் காரணம்?

பாகிஸ்தான் அமைச்சரின் கூற்று

இராவல்பிண்டி, டிச. 26—
"இந்தியாவுடன் நடைபெற்ற போரில் பாகிஸ்தானுக்கும் ஈடு தோல்வி ஏற்பட்டதற்கான முழுப் பழியையும் இராணுவத்தின்மீது சுமத்த வேண்டாம்"

என்று, பாகிஸ்தானில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் ரகீம் என்பவர், அந்த நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

"சுயநலவாதிகளான ஒரு சிறு இராணுவக் கும்பலினுலேயே இத்தோல்வி ஏற்பட்டது" என்று அவர் குற்றஞ்சாட்டினர்.

வங்கதேச விடுதலை -- நாட்டுப் பாதுகாப்பு நாள் விழா

கலைஞர் -- நாவலர் -- புரட்சி நடிகர் -- மற்றும் அமைச்சர்கள் -- சர்வ கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் ஊர்வலம் -- பொதுக்கூட்டம்

பாதுகாப்பு நிதிக்கு மாவட்டங்களின் காணிக்கை -- வீரத் தியாகிகளின் குடும்பங்கட்கு நிதியுதவி

சென்னை, டிச. 27—
வங்க தேச விடுதலை விழாவும் – இந்தியப் பாதுகாப்பு நாளும், நேற்று தமிழ்நாடெங்கும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

கழகத் தலைவர் கலைஞர் – பொதுச்செயலாளர் நாவலர் -- பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., மற்றும் அமைச்சர்கள் அனைவரும் ஆங்காங்கு நடைபெற்ற விழா நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

போரில் வீரமரணம் எய்திய வீரர்களின் குடும்பங்களுக்குத் தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட உதவித் தொகையை ஆங்காங்கு அமைச்சர்கள் வழங்கினர்.

அந்தந்த மாவட்டத்தின் சார்பில் அளிக்கப்பட்ட பாதுகாப்பு நிதியையும் அமைச்சர்கள் பெறறுக்கொண்டனர்.

முதலமைச்சர் கலைஞர்

கழகத் தலைவரும் – தமிழக முதல்வருமான கலைஞர் அவர்கள், திருவாரூரில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டார்.

போரில் வீர மரணமடைந்த திருக்கடையூர் பாண்டுரங்கன் குடும்பத்துக்கு, கலைஞர் ரூ. 5,000 வழங்கினர்; அதனை பாண்டுரங்கனின் தாயார் பெற்றுக் கொண்டார்; பாண்டுரங்கன் குடும்பத்துக்கு நிலப் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் தஞ்சை மாவட்டத்தின் சார்பில் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 15 இலட்சம் கலைஞரிடம் அளிக்கப்பட்டது.

மாவட்டக் கலெக்டர் திரு. அந்தோணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கு கொண்டு பேசினர்.

தஞ்சை மாவட்ட தி. மு. க. சார்பில் ரூ 251; தர்மபுரம் ஆதீனம் சார்பில் ரூ. 25,000; மற்றும் பல அமைப்புகள் -- தனிப்பட்டவர்கள் சார்பிலும் நிதி அளிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை நகராட்சித் தலைவர் கருணை எம். ஜமால் வரவேற்ருர்.

பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக மாபெரும் அணிவகுப்பு ஒன்றும் நடைபெற்றது.

கல்வியமைச்சர் நாவலர்

சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில் மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளரும் -- கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பங்கு கொண்டார்.

சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு. ம. பொ. சிவஞானம், டி. என். அனந்தநாயகி, ஏ. எஸ். கே. ஐயங்கார், ஏ. ஆர். பெருமாள், எச். வி. ஹண்டே, திருப்பூர் மொய்தீன, கோ. பூவராகன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

விழா இறுதியில் டி. ஆர். பாப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

புரட்சி நடிகர் -- பேராசிரியர்

கழகப் பொருளாளர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கோவையில் நடந்த விழாவில் பங்கு கொண்டார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் இந்த விழாவில் கலந்துகொண்டார்.

சிதம்பரம் பூங்காவில் மாவட்டக் கலெக்டர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கோவை மாவட்ட தி.மு.க. செயலாளர் இராசமாணிக்கம், நகராட்சித் தலைவர் சுக்கூர், பாலதண்டாயுதம் எம்.பி., ஆர். கந்தசாமி, ஏ. சுப்பிரமணியம், கருத்திருமன், பி. இராமமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

"மாவட்டத்தின் சார்பில் ரூ. 2 கோடி வழங்கப்படும்" என்று கூறி -முதல் தவணையாக ரூ. 7 50 இலட்சத்தை, மாவட்டக் கலெக்டர், அமைச்சர் க. அன்பழகன் அவர்களிடம் அளித்தார்.

ஆலை அதிபர்கள் சார்பில் ஜி கே. சுந்தரம் முதல் தவணையாக ரூ. 2 18,842 அளித்தார்; 'மேலும் ரூ 2 இலட்சம் அளிக்கப்படும்' என்ருர் அவர்.

பெண்கள் சார்பில் திரட்டப்பட்ட போர் வீரர்களுக்கான பொருட்கள் மாவட்டக் கலெக்டரின் துணைவியாரிடம் அளிக்கப்பட்டது.

கூட்டம் துவங்குவதற்கு முன் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தை, அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் மணிக்கூண்டு அருகே அமைக்கப்பட்ட அலங்கார மேடையிலிருந்து பார்வையிட்டார்.

வேலூரில்:

வேலூரில் நடந்த விடுதலை நாள் விழாவில் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் கலந்துகொண்டார்.

போரில் வீர மரணமடைந்த ஆறுமுகத்தின் மனைவியை திருப்பத்தூர் மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் கூறி உதவித் தொகையையும் -- நிலப் பட்டாவையும் வழங்கினர்.

வீர மரணமடைந்த மற்றும் 12 வீரர்களின் குடும்பங்களுக்கும் அமைச்சர் உதவித் தொகை வழங்கினர்.

அமைச்சருடன் மாவட்டக் கலெக்டரும் சென்றிருந்தார்.

பாதுகாப்பு நிதிக்கு மாவட்ட ஊராட்சிகள்-ஒன்றியங்கள் சார்பில் ரூ. 2 இலட்சம் வழங்கப்பட்டது.

பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

சேலத்தில்:

சேலத்தில் நடந்த விடுதலை விழாவில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் கலந்துகொண்டார்.

போரில் மரணமடைந்த மூன்று வீரர்களின் குடும்பங்களுக்கு அமைச்சர் ரூ. 5,000 வீதம் உதவிப் பணம் வழங்கினர்.

தர்மபுரியில்:

தர்மபுரியில் நடந்த விடுதலை விழாவில், அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் கலந்துகொண்டார்.

வீர மரணமடைந்த வேலு, மாதையன் ஆகிய இருவரின் குடும்பங்கட்கும் உதவித் தொகை ரூ. 5,000 வீதம் பாங்கியில் போடப்படும் என்பதை அமைச்சர் அறிவித்தார்; நிலப் பட்டாவும் வழங்கப்பட்டது.

பாளையங்கோட்டை:

பாளையங்கோட்டை வ. உ. சி. திடலில் நடைபெற்ற விடுதலை விழாவில் கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் கலந்துகொண்டார்.

போரில் வீர மரணமடைந்த மோசஸ், கணபதி ஆகியோரின் குடும்பங்கட்கு ரூ 5,000 உதவிப் பணம் வழங்கப்பட்டது.

காஞ்சீபுரத்தில்:

காஞ்சீபுரத்தில் நடந்த விடுதலை விழாவில், அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் கலந்துகொண்டார்.

போரில் வீர மரணமடைந்த தலைப்பாகட்டி என்ற வீரரின் மனைவிக்கு ரூ. 5000-மும், 1½ ஏக்கர் நிலத்துக்கான பட்டாவும் வழங்கினர் அமைச்சர்.

இதைத் தவிர, ஆர். கே. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், தலைப்பாகட்டி குடும்பத்துக்கு ரூ. 150 அளிக்கப்பட்டது.

திருச்சியில்:

திருச்சியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் அன்பில் தாமலிங்கம் கலந்துகொண்டார்; மற்றும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்குகொண்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சி மாவட்டத்தின் சார்பில் ரூ. 8 இலட்சத்தை முதல் தவணையாக வழங்கினர்.

தென் சென்னை மின்சார கார்ப்பரேஷன் சார்பில் அதன் தலைவர் கி. ஆ. பெ. விசுவநாதம் ரூ. 1 இலட்சம் வழங்கினர்.

கூட்டம் துவங்குவதற்குமுன் மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது.

போரில் வீரமரணமடைந்த முருகேசன், மாமுனி, அண்ணாவி ஆகியோர் குடும்பங்கட்கு உதவித் தொகையும், துணிமணிகளும் வழங்கினர் -- அமைச்சர்.

உதகையில்:

உதகையில் நடைபெற்ற விடுதலை விழாவில், அமைச்சர் மு. கண்ணப்பன் கலந்துகொண்டார்.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவரும் போரில் வீர மரணமடைந்தவருமான தேவதாசின் குடும்பத்துக்கு ரூ. 5,000 உதவிப் பணத்தை அமைச்சர் வழங்கினர்.

கன்னியாகுமரியில்:

நாகர்கோவிலில் நடந்த விடுதலை விழாவில் அமைச்சர் க. இராசாராம் அவர்கள் கலந்துகொண்டார்.

போரில் வீர மரணமடைந்த வீரர் நாராயணன் என்பவரின் குடும்பத்துக்கு அமைச்சர் ரூ. 5,000 வழங்கினர்.

வீர மரணமடைந்த மற்றொரு வீரரான கிருஷ்ணன் நாயரின் குடும்பத்துக்கும் இதேபோல் நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்தியாமீது பழிசுமத்திய நாடுகள்-- உண்மை நிலையை உணர்ந்துவிட்டன

விரைவில் வங்காள தேசத்தை அங்கீகரிக்கும்

'மக்களின் உணர்வை பூட்டோ உணருவது அவசியம்' --- இந்திய வெளிநாட்டு அமைச்சர் சுவரண்சிங் கருத்து விளக்கம்

புதடில்லி, டிச. 26—

" இந்தியா – பாகிஸ்தான் போரில், இந்தியாவின் நிலையைப் பற்றிப் பல நாடுகள் தவருன கருத்துக்களைக் கொண்டிருந்தன ; ஐ. நா. வில் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து – உண்மை நிலையை அவர்களுக்கு விளக்கிக் கூறினேம்.

" இந்தியாமீது பழிசுமத்திய நாடுகள்கூட இப்போது தங்களுடைய கருத்துக்களுக்கும் போதிய ஆதரவு இல்லாமல் தவிக்கின்றன ; அந்த அளவுக்கும் பல நாடுகளுக்கு உண்மை நிலையைப் புரியச் செய்திருக்கிறேம்.

" வங்காள தேசத்தில் 9 மாதங்களாகப் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய அட்டூழியங்களை மறந்து -- 10 இலட்சம் பேர் கொல்லப்பட்டதை மறந்து -- ஒரு கோடி பேர் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடியதையும் மறந்து, 'பாகிஸ்தானை இரண்டாகப் பிரிய விடுவதா' என்று மட்டும் பல நாடுகள் கேட்டு வந்தன ; இந்த நிலை ஏற்பட்டதற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர்தானே காரணம் ? வங்காள மக்களுக்குச் சுதந்தர வெறியைத் தூண்டியதே அவர்கள்தானே ? அந்த நாடுகளுக்கு இதனை நாம் தெளிவாக விளக்கிக்கூறிப் புரியவைத்தோம்.

" வங்காள தேசத்துடன் துவக்கக் கட்டத் தொடர்புகொள்வதற்குப் பல நாடுகள் விருப்பம்கொண்டுள்ளன ; காலப்போக்கில் இந்த நாடுகள் அனைத்தும், வங்காள தேசத்தை அங்கீகரிக்கும் நிலை உருவாகிவிடும் ''

என்று இந்திய அரசின் வெளிநாட்டுத் துறை அமைச்சர் சுவரண் சிங், பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு புதுடில்லிக்குத் திரும்பியதும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் ; அவர் மேலும் கூறியதாவது :--

" பாகிஸ்தான் அதிபர் பூட்டோ உண்மை நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் ; இன்னும் 'வங்காள தேசம்' என்ற நிழலைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கக் கூடாது.

வங்காள தேசத்தைச் சேர்ந்த ஒருவரை (நூருல் அமீன்) துணைக் குடியரசுத் தலைவராக ஆக்குவதால் -- வங்காள தேசத்தைச் சேர்ந்த சிலருக்கு -- அமைச்சர் பதவி கொடுப்பதால் -- வங்காள தேச மக்களின் சுதந்தர உணர்ச்சியை அழித்துவிட முடியும் என்று பூட்டோ கருதினல், அவர் 'வருந்தத்தக்க தவறு' செய்கிருர் என்றுதான் அர்த்தமாகும்.

வங்காள தேசத்தின் உண்மையான பிரதிநிதி அல்லாத எந்த மனிதனையும் கண்டு உலகம் ஏமாந்துவிடாது ; அதுவும், வங்காள தேச மக்கள் நிச்சயம் ஏமாறமாட்டார்கள்.

இதுபோன்ற செயல்களால் வங்காள மக்கள் மேலும் கொதிப்படைந்துள்ளனர் என்பதைப் பூட்டோ உணர வேண்டும்.

யாகியா கானும் இதே முறையைத்தான் கடைப்பிடித்தார் ; 'நூருல் அமீனை தலைமையமைச்சராக ஆக்குகிறேன்' என்ருர் ; வங்காள தேசத்தைச் சேர்ந்த ஒருவரை ஐ. நா. சபைக்கு அனுப்பினர் ; யாகியா கான் வழியைப் பின்பற்றுவதைப் பூட்டோ கைவிடவேண்டும்.

'நானே எல்லாம்' என்ற போக்கை மாற்றி சனநாயக அரசை பூட்டோ அமைக்க வேண்டும் ; அப்படிச் செய்தால் தான் உண்மையான அமைதி ஏற்படும்.

பதவியேற்றவுடன் பூட்டோ, இந்தியாவை அச்சுறுத்திப் பேசினர் ; ஆனல், அவருடைய உண்மையான நிலை அது அல்ல; அவர் பேச்சுக்களில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டியது இல்லை ; உண்மை நிலையை நன்ருகப் புரிந்துகொள்வதற்கு அவருக்கு நாம் அவகாசம் கொடுப்போம் ; நெருக்கடியான நேரத்தில் அவர் பதவி ஏற்றிருக்கிருர்; அவரிடம் நமக்கு இரக்கம்தான் தோன்றுகிறது–சீற்றம் அல்ல!''

மிரட்டலைச் செயல்படுத்த பூட்டோ முனைந்தால்...

ஜலந்தர், டிச. 26—

" பாகிஸ்தானை தோல்வியுறச் செய்ததற்காகப் பழி வாங்கப் போவதாக பூட்டோ மிரட்டுகிருர் ; இம்மிரட்டலைச் செயல்படுத்த பூட்டோ முயன்ருல், தற்போது கிடைத்ததைக் காட்டிலும் மோசமான தோல்வி பாகிஸ்தானுக்குக் கிடைக்கும்.

" பூட்டோவின் மிரட்டல் 'வெத்து வேட்டு'தான் என்ருலும், நாம் மெத்தனமாக இருந்துவிடக் கூடாது ; தமது மிரட்டலைப் பூட்டோ செயல்படுத்தத் துணியாதவாறு எல்லை நெடுகிலும் நமது இராணுவம் விழிப்புடன் இருந்துவர வேண்டும் ''

என்று பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் எச்சரிக்கை செய்தார்.

" ஜெனரல் யாகியா கான் செய்த தவறையே பூட்டோவும் செய்ய முயன்ருல், பாகிஸ்தானுக்கு இராணுவ -- பொருளாதார இழப்பு மேற்கொண்டும் ஏற்படும் ; அது மட்டுமன்றி அவமானத்தையும் ஏற்க நேரிடும் '' என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

" வங்க தேசத்தை அதன் மக்களிடம் இந்தியா ஒப்படைத்திருந்தே, இந்தியாவுக்கு நாடு பிடிக்கும் ஆசை நோக்கம் இல்லை என்பது தெளிவாகும் '' என்றும் அவர் குறிப்பிட்டார்.

" யாகியா கானை அழிக்க இந்தியா விரும்புகிறது '' எனக் கூறப்படும் கூற்றையும் அவர் மறுத்தார்.

வங்காள தேச சுதந்தரக் குடியரசு

அமைச்சரவையின் முதல் கூட்ட முடிவுகள்

டாக்கா, டிச. 26—

வங்காள தேச அமைச்சரவையின் முதல் கூட்டம், டாக்கா நகரில் உள்ள முஜிபுர் ரகிமான் வீடான 'பங்க பவனி'ல் நடைபெற்றது ; இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :—

வங்காளி மொழியை -- வங்காள தேசத்தின் ஆட்சி மொழியாக ஆக்குவது (முன்பு இங்கு உருது ஆட்சிமொழியாக இருந்தது).

வங்காளதேசம் முழுவதிலும் வங்காள மொழியைப் பாட மொழியாகச் செயல்படுத்துவது.

வங்காள தேச சுதந்தரத்துக்காகப் பாகிஸ்தானியர்களுடன் போர் செய்து வீர மரணமடைந்தவர்களுக்கு டாக்கா நகரில் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்.

போரில் வீர மரணமடைந்தவர்களின் குடும்பத்துக்கு உதவி செய்வதற்காக, 'போர் நினைவு நிதிக் குழு' ஒன்று அமைத்துப் பணம் திரட்டுவது.

வங்காள தேசத்தில் இருக்கும் அரசாங்க பாங்கிகளுக்கு, 'பாகிஸ்தான் பாங்கி' என்று பெயர் இருக்கிறது ; இந்த பெயரை ஒழித்துவிட்டு, 'வங்காள பாங்கி' என்று பெயர் சூட்டவேண்டும்.

இதேபோல், எல்லா மாநகராட்சிகளிலும், 'பாகிஸ்தான்' என்று இருக்கும் பெயரை ஒழித்துவிட்டு, 'வங்காள தேசம்' என்று பெயர் மாற்றம் செய்வது.

ஏராளமான மாணவர்கள் சுதந்தரப் படையில் சேர்ந்து பணியாற்றிக்கொண்டு இருப்பதால், முன்பு நடந்த பரீட்சைகள் எல்லாவற்றையும் செல்லாது என்று அறிவித்து புதிதாகப் பரீட்சைகள் நடத்துவது.

ஆயுத உற்பத்தியில் கடைபிடிக்கும் ஆமை வேகம்

தணிக்கைக் குழு கண்டனம்

புதுடில்லி, டிச. 26—

" பாதுகாப்புத் துறையினர் ஓர் ஆயுதத்தின் நவீன மாதிரியைத் தயாரிப்பதில் ஆமை வேகத்தில் சென்றிருக்கிருர்கள் ''

என்று நாடாளுமன்றத்தில், அரசு வரவு -- செலவுத் தணிக்கைக் குழு அதிருப்தி தெரிவித்திருக்கிறது.

" 1959-ல் இந்தத் திட்டத்துக்காக முதலில் முதலீடு செய்யப்பட்டது ; இதுவரை அதில் ரூ. 9 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது ; இதை மூன்று கட்டங்களாக -- மூன்று குறிப்பிட்ட நாட்களில் நிறைவேற்றுவதென்று முதலில் முடிவு செய்யப்பட்டது ; ஆனல் இவைகளில் ஒன்று எதிர்பார்த்தபடி முடியவில்லை.

" 1964-ல் 60 ஆயுதங்கள் செய்து முடிப்பது என்று திட்டமிடப்பட்டது ; ஆனல் 1967-ல்தான் இது முடிந்தது ''

என்று குழுவின் அறிக்கை கூறுகிறது ; அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

" இவ்வாறு உற்பத்தி குறைவாக இருந்ததால், இந்த ஆயுதங்களை ரூ 5 கோடிக்கு அரசாங்கம் இறக்குமதி செய்தது ; இந்த ஆயுதங்கள் செய்யவேண்டிய பாகங்களையும் ரூ. 1.14 கோடிக்கு இறக்குமதி செய்தது; உற்பத்தி அதிகமானல்தான் அத்தனைப் பாகங்களையும் உற்பத்தி செய்ய முடியும்.

நாடாளுமன்றத்தில் இதன்மீது நடைபெற்ற விவாதத்துக்கு அரசாங்கத் தரப்பில் பதில் அளிக்கப்பட்டபோது, 'இந்த ஆயுதத்தின் உற்பத்தியைப் படிப்படியாக அதிகரிக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது' என்று கூறப்பட்டது ; '1973—74-ம் ஆண்டு வாக்கில் மாதத்துக்கு 8 ஆயுதங்கள் வீதம் உற்பத்தி செய்யப்படும் ; 1970 மார்ச்சுக்குப் பின்பு மாதந்தோறும் 3 ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன ; 1970 அக்டோபர்வரை ரூ 6 கோடிக்குமேல் இங்கு ஆயுதங்கள் உற்பத்தியாகி விட்டன' என்று அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டது.

சீனவும் போரில் தலையிடும் '' என்று ஜெனரல் யாகியா கான், டாக்கா தளபதி நியாசியிடம் கூறினராம்.

" அதிபர் யாகியா கான், என்னை ஏமாற்றிவிட்டார் என்று டாக்கா தளபதி நியாசி புகார் செய்தார் '' என்று பிரிட்டிஷ் வானெலியின் நிருபர் ஒருவர் கூறினர்.

போர் நடந்துகொண்டிருந்த போது, ஆலன் ஹார்ட் என்ற நிருபர், டாக்காவில் இருந்தார் ; சரணகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு தளபதி நியாசி, தன்னிடம் இப்படிக் குறைப்பட்டுக் கொண்டதாக ஆலன் ஹார்ட் கூறுகிருர்.

" எங்களுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டிருந்தன; நாங்கள் போர் வீரர்களாகையால், உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தோம் ''

என்று நியாசி சொன்னதாகவும் நிருபர் ஆலன் ஹார்ட் கூறுகிருர்

அமெரிக்க தலையீட்டை சீன கோரியதாம்

அண்மையில் நடந்து முடிந்த இந்தியா -- பாகிஸ்தான் போரில் அமெரிக்கா தனது படைகளை அனுப்பித் தலையிட வேண்டுமென்று சீன கோரியதாக 'பிராவ்தா' பத்திரிகையில் ஒரு இரஷ்ய விமரிசகர் ஒருவர் எழுதியிருக்கிருர்.

" அமெரிக்க ஏழாவது கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் இந்துமாக் கடல் பகுதிக்கு அனுப்பப்படுவற்கு சீனவின் நிலையும் ஒரு காரணமாகும் '' என்று அவர் எழுதியிருக்கிருர்.

மக்களின் சுதந்தரப் போராட்டத்திற்கு எதிராகச் செஞ்சீன, ஏகாதிபத்திய வாதிகளுக்கு உதவியாக இருந்து துரோகம் செய்ததாகவும் அவர் கண்டித்திருக்கிருர்.

மீண்டும் போர் மூளுமா?

பாதுகாப்பு அமைச்சர் பதில்

'இரண்டே நாட்களில் பூட்டோவின் சூடு தணிந்துவிட்டது' என்கிருர்

புதுடில்லி, டிச. 24—

பாதுகாப்பு அமைச்சர் புதுடில்லியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியதாவது :—

" பாகிஸ்தானின் புதிய அதிபராக பூட்டோ பதவியேற்றவுடன் அவருடைய பேச்சில் அதிக சூடு இருந்தது ; மிரட்டல்களை வெளியிட்டார்.

ஆனல் கடந்த 2 நாட்களில் பூட்டோவின் பேச்சில் வேகம் தணிந்துவிட்டது ; ஆகவே பாகிஸ்தான் மீண்டும் போர் தொடுக்காது.''

தொடர்ந்து நிருபர்கள் கேட்ட கேள்விகளும் -- ஜெகஜீவன்ராம் கூறிய பதில்களும் வருமாறு :—

கேள்வி :—'' வங்காள தேசத்தில் கொலை நிகழ்ச்சியில் ஈடுபட்ட பாகிஸ்தான் சிப்பாய்கள்மீது விசாரணை நடத்தப்படுமா ?''

பதில் :—'' அதுபற்றி இப்போது பதில் சொல்வதற்கில்லை.''

கேள்வி :—'' முஜிபுர் ரகிமானை விடுதலை செய்தால்தான் போர்க் கைதிகளைத் திருப்பி அனுப்புவோம் என்று பாகிஸ்தானிடம் நிபந்தனை விதிக்கப்படுமா ?''

பதில் :—'' முஜிபுர் ரகிமானை முன்கூட்டியே விடுதலை செய்துவிடுவார்கள் என்று நம்புகிறேம் ; ஆகவே நிபந்தனை விதிக்க அவசியம் இருக்காது.''

கேள்வி :—'' போரின்போது அமெரிக்கக் கப்பற்படை இந்தியாவை நோக்கி வந்ததே -- அதுபற்றி என்ன நினைத்தீர்கள் ?''

பதில் :—'' எதற்காக வருகிறது என்பதை அமெரிக்கக் கப்பற்படை அறிவித்துவிட்டது ; ஆகவே அதுபற்றிக் கவலைப்படவில்லை.''

கேள்வி :— '' இரஷ்யக் கப்பற்படை இந்தியாவுக்கு ஆதரவாக வந்தது தெரியுமா ?''

பதில் :— '' சர்வதேசக் கடல் பகுதியில் எத்தனையோ கப்பற்படைகள் செல்கின்றன ; எது எங்கே போகிறது என்று பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ?'

கேள்வி :— '' வங்காள தேசம் சுதந்திர நாடாகிவிட்டதே -- இரஷ்யாவும் மற்ற நாடுகளும் ஏன் அதை அங்கீகரிக்கவில்லை ?''

பதில் :— '' வங்காள தேச அரசாங்கத்திற்காக நான் பதில் கூற விரும்பவில்லை.''

கேள்வி :—'' சரணடைந்த பாகிஸ்தான் சிப்பாய்களைத் திருப்ப அழைத்துக்கொள்ள பூட்டோ விரும்பவில்லையாமே ?''

பதில் :—'' பூட்டோவின் மனதில் என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது.''

கேள்வி :—'' அமெரிக்கா வகுத்துக் கொடுத்த திட்டத்தின்படி தான் பாகிஸ்தான் போர் தொடுத்ததாகச் செய்திகள் வந்திருக்கின்றனவே —உண்மையா ?''

பதில் :—'' பத்திரிகைகளில் வந்த செய்திக்கு நான் பதில் கூற விரும்பவில்லை. '

கேள்வி :—'' பனிக்காலம் முடிந்தவுடன் இந்தியாமீது சீன போர் தொடுக்குமா ?''

பதில் :—'' அது இங்கு விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினை அல்ல.''

தொழிலாளர் இன்சூரன்சு திட்டம்

சென்னை, டிச. 24—

தொழிலாளர்களுக்கான அரசு இன்சூரன்சுத் திட்டமானது தமிழ் நாட்டில் 40 நிலையங்களில், 4,02,500 தொழிலாளர்களுக்குப் பயன்தருகிறது.

வேலைசெய்யும்போது காயமேற்படுதல் -- உடல்நலக் குறைவு -- மகப்பேறு ஆகிய காரணங்களுக்கான நிதியுதவி வழங்கி 64 அலுவலகங்கள் உள்ளன.

1971 அக்டோபரில் உடல்நலக் குறைவு காரணமாக நிதி உதவி கோரியவர்களுக்கென ரூ 12,90,651.05 வழங்கப்பட்டது.

வேலைக் காலத்தில் காயமுற்றதாக உதவிகோரிய 2 355 பேருக்குத் தற்காலிக உதவி நிதியாக ரூ. 1,35,716 55-ம், 445 பேருக்கு நிரந்தர உதவித் தொகையாக ரூ. 1,35 413 62 ம், இறந்துபோன தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ 12,939.08-ம்; 201 பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவி நிதியாக ரூ. 64,799.90-ம் வழங்கப்பட்டதுடன், தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளும் அளிக்கப்பட்டன.

இது தவிர, இறந்துபோன தொழிலாளர்களின் ஈமச் சடங்குகளுக்கென ரூ. 6,498-ம் தரப்பட்டது.

பொய்க் காரணம் காட்டி உதவி பெற்றுக்கொண்ட நான்கு தொழிலாளர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றம் அவர்களுக்கு ரூ. 155 அபராதம் விதித்துள்ளது.

இத்திட்டத்திற்கெனச் சிறப்புத் தொகை அளிக்காத சில தொழிலதிபர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு, ரூ. 21,489.63 வசூலிக்கப்பட்டது.

தளபதிகளை ஏமாறச் செய்த யாகியா கான்

இலண்டன், டிச. 26—

டாக்காவில் இருந்த பாகிஸ்தான் துருப்புகள் சரணடைவதில் ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணம் என்ன என்பது இப்போது தெரியவந்திருக்கிறது.

" இந்திய இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக அமெரிக்காவும் --

வாக்குச்சீட்டில் கையெழுத்து

தேர்தல் முறையில் மாறுதல்

புதுடில்லி, டிச. 26—

தேர்தல்களில் ஆள் மாறாட்டத்தைத் தடுப்பதற்காக இனி நடக்கவிருக்கும் எல்லாத் தேர்தல்களின்போதும் வாக்குச் சீட்டுக்கள் அடிக்கட்டையுடன்கூடியதாக இருக்கும்.

வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டுக் கொடுக்கப்படுகையில், அதன் அடிக்கட்டையில் வாக்காளரது கையெழுத்து அல்லது இடது கைப் பெருவிரலின் முத்திரை வாங்கிக்கொள்ளப்படும்.

இந்த ஏற்பாட்டைச் செயலுக்குக் கொண்டுவருவதற்காகத் தேர்தல் விதிகளில் செய்யப்பட்டுள்ள சிறு மாறுதல்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

" வாக்குச் சீட்டுக்கள், அடிக்கட்டைகளுடன்கூடியதாக இருக்க வேண்டும் '' என்று பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் யோசனை தெரிவித்திருந்தனர். இந்த யோசனையை அண்மையில் நடந்த மாநிலத் தலைமைத் அதிகாரிகள் மாநாடு ஏற்றுக்கொண்டது.

" நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றங்களுக்கும் நடக்கும் எல்லாத் தேர்தல்களுக்கும் இந்த ஏற்பாடு பொருந்தும் '' என்று தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா, செய்தியாளரிடம் தெரிவித்தார்.

புது ஏற்பாட்டின்படி, வாக்காளர்களின் வரிசை எண்ணும் -- வாக்காளர் பட்டியலில் வாக்காளரது பெயர் உள்ள பகுதி எண்ணும் வாக்குச் சீட்டு அடிக்கட்டையில் குறிக்கப்படும்.

இதுவரையில், வாக்காளருக்கு அளிக்கப்படும் வாக்குச் சீட்டின் வரிசை எண், அப்பட்டியலில் வாக்காளரது பெயருக்கு எதிராகக் குறிக்கப்பட்டு வந்தது.

நமக்கென்று ஒரு பாதை உண்டு

தடங்கல்களைக் கண்டு தயங்க மாட்டோம்

எந்தச் சக்திக்கும் நாம் கட்டுப்பட இயலாது

அம்பாலா, டிச. 26—

" நமக்காக ஒரு பாதையை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறேம் ; அந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் ; இடையில் உள்ள தடங்கல்களைக் கண்டு தயங்கி நின்றுவிட மாட்டோம் !

" அமைதி -- முன்னேற்றம் -- செழிப்பு ஆகிய குறிக்கோள்களை நோக்கி முன்னேறிச் செல்ல விரும்புகிறேம் ; அந்த முன்னேற்றத்தை எந்த நாடும் தடுத்து நிறுத்திவிட முடியாது !

" சமாதான -- சனநாயகப் பாதையில் செல்ல இந்தியா உறுதிகொண்டிருக்கிறது ; இந்தப் பாதையினின்றும் தவறிச் செல்ல எந்தச் சக்தியும் நம்மைக் கட்டாயப்படுத்த முடியாது !

" இந்திய மக்கள் துணிச்சலோடு வாழ்வார்கள் -- துணிச்சலுடன் போராடுவார்கள் -- அவசியம் ஏற்பட்டால் துணிச்சலுடன் உயிரைத் தியாகம் செய்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை !

" நெருக்கடி மிகுந்த நாட்கள் இன்னும் கடந்து சென்றுவிடவில்லை ; முன்னெச்சரிக்கையுடன் இருந்துவர வேண்டும் ; மீண்டும் போர் ஏற்படுமானல் -- அதை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும் ; போர் வராவிட்டாலும், நாம் சமாளிக்க வேண்டிய வேறு பல பிரச்சினைகள் இருக்கின்றன !

" இந்தியாவின் விவகாரங்களில் சில வல்லரசுகள் தலையிட்டு வருகின்றன ; இப்போது காலம் மாறிவிட்டது ; எனவே, எந்தத் தலையீட்டையும் நாம் சகித்துக்கொண்டிருக்க மாட்டோம் !

" வரலாற்றின் திருப்புமுனையில் நாம் இருக்கிறேம் ; காலப் போக்கில், அயல்நாட்டு உதவிகளை நாம் உதறித் தள்ளியாக வேண்டும் ; நெருக்கடியான நேரத்தில் சில நாடுகள் நமக்கு அளித்துவந்த உதவியை நிறுத்தி வைத்தன ; இப்படிப்பட்ட செயலின்மூலம் நம்மைக் கட்டாயப்படுத்த அந்த நாடுகள் முயற்சி செய்தன ; எனவே, எல்லாத் துறைகளிலும், 'தன் கையே தனக்கு உதவி' என்ற நிலையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும் ; வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுக்கு இதுதான் நாம் அளிக்கும் பதிலாகும் !

" நாம் யாரைப் பார்த்தும் அஞ்சிக் கிடக்கவில்லை ; அதேபோன்று, யாரையும் நாம் மிரட்டவும் இல்லை !

" இப்போதைய போரின் விளைவுகள், சில பெரிய வல்லரசுகளின் கணக்குகளையெல்லாம் கவிழ்த்துவிட்டன ; உலக வரலாறே இப்போது மாறிவிட்டது !

" வங்க தேச விடுதலை, இந்தியாவின் இலட்சியங்களுக்கும் -- கொள்கைகளுக்கும் கிடைத்த வெற்றியாகும் ; நாம் மேற்கொண்ட நிலை சரியானது என்று மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.''

---தலைமையமைச்சர் இந்திரா காந்தி

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு : நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

தட்டுப்பாடின்றி நியாய விலையில் பண்டங்கள் கிடைக்க ஏற்பாடு

90 இலட்சம் குடும்பங்களுக்கு நிரந்தர அடையாளக் கார்டுகள்

தமிழ்நாடு அரசு திட்டம் பற்றி அமைச்சர் ப. உ. ச. விளக்கம்

சென்னை, டிச. 26—

நியாய விலைக் கடைகளிலிருந்து இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக்கு வாங்குவதற்கான வசதிகளைச் செய்யும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள 90 இலட்சம் குடும்பங்களுக்கு அடுத்த மாதத்தில் நிரந்தர அடையாளக் கார்டுகள் வழங்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருக்கிறது.

" இன்றியமையாப் பண்டங்கள் தட்டுப்பாடு ஏற்படும்போதெல்லாம், மக்களுக்கு நியாய விலையில் அவை கிடைப்பதற்கு வசதியாக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள குடும்பங்களுக்குக் கார்டுகள் வழங்கப்படும் '' என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தபட்சத் தேவைக்காக வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

" சென்னை நகரைப் பொறுத்தவரையில், வீடு வீடாக வந்து கார்டுகள் வழங்கப்படும் ; ஏற்கனவே அரசிடமுள்ள குடும்பங்கள் பற்றிய விவரப் பட்டியலின் அடிப்படையில் இந்தக் கார்டுகள் வழங்கப்படும் ; வெளியூர்களிலிருந்தோ அல்லது மாற்றலாகிப் புதிதாகவோ சென்னை நகருக்குக் குடிவந்தவர்கள் சிவில்சப்ளை (உணவுத் துறை) அதிகாரிகளுக்கோ, நகர விநியோக அதிகாரிக்கோ மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம் '' என்று அறிவித்தார்.

இத்தொடர்பில் அவர் விளக்கியதாவது :—

சனவரி மாதத் தேவைக்காக தமிழ்நாட்டிற்கு 8,000 டன்னுக்குச் சற்று அதிகமான சர்க்கரை ஒதுக்கப்பட்டுள்ளது ; மக்கள் அனைவருக்கும் தேவையான அளவு சர்க்கரையாவது கிடைக்கச் செய்யும் வகையில் மாதம் ரூ. 300-ம்—அதற்குக் குறைந்த அளவு வருமானமும் உள்ளவர்களுக்கு ஒரு கிலோவும், அதற்கு மேற்பட்டு ரூ. 500 வரை வருமானமுள்ளவர்களுக்கு மாதம் 2 கிலோ வீதமும் சர்க்கரை வழங்கலாம் என்பது திட்டமாகும்.

ஒரு குடும்பத்தின் குறைந்தபட்சத் தேவையையே இது நிறைவு செய்யும் ; அதற்குமேல் சர்க்கரை தேவைப்படுகின்றவர்கள், வெளிச் சந்தையில் -- அவர்கள் விற்கும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

கார்டுகள் மூலம் விற்கப்படும் சர்க்கரையின் விலை கிலோ ரூ. 2-க்குக் கிடைக்கும்.

குடும்பக் கார்டுகள் வழங்கல்

குடும்பக் கார்டுகள், சனவரி மாத மத்திக்குள் சென்னை நகரில் கொடுக்கப்பட்டுவிடும் ; மாவட்டங்களில்--ஊராட்சி ஒன்றியங்கள்மூலம் தமிழ்நாடு முழுவதிலும் வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள இன்றியமையாக் கார்டுகள் வழங்கப்படும்.

நியாய விலையில் அரிசி

தற்போது படி அரிசித் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோருக்கு சனவரி முதல் தேதியிலிருந்து மாற்றுத் திட்டமாக நியாய விலையில் அரிசி வழங்கப்படும்.

புதிய கார்டுகள் வழங்கப்படும் வரையில் அவர்கள் பழைய கார்டுகளை காட்டியே நியாய விலை அரிசியை வாங்கிக் கொள்ளலாம் ; இவர்களுக்கு 15 நாட்களுக்கு தலா 1,500 கிராம் அரிசி வீதம் கிடைக்கும்.

அரிசி விலை ஏற்றம் காரணமாக பால் கார்டுதாரர்களுக்கு பால் வழங்கும் டிப்போக்கள்மூலம் தற்போது விற்கப்பட்டுவரும் அரிசி, டிசம்பர் 31-ந் தேதியுடன் நிறுத்தப்படும் ; இனி அவர்கள் வெளிச்சந்தையிலேயே வாங்கிக் கொள்ளவேண்டும்.

பொங்கலின்போது அறுவடை முடிந்து நிறைய அரிசி சந்தைக்குவந்துவிடுமாதலால் விலை குறையும்.

கட்டுப்பாடின்றி மண்ணெண்ணெய்

மண்ணெண்ணெய்மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் ரத்து செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கை வண்டிக்காரர்கள் உள்ளிட்ட பதிவு செய்துகொண்டுள்ள சில்லறை வியாபாரிகட்கு மட்டுமே விற்பனைக்காக மண்ணெண்ணெய் ஒதுக்கும்படி எண்ணெய் நிறுவனங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

கட்டுப்பாடுகள் ரத்தாவதால் இன்னும் ஓரிரு நாட்களில் தட்டுப்பாடின்றி மண்ணெண்ணெய் கிடைக்கும்.''

மின்சாரக் கட்டணம் சீரமைப்பு

நிலைமை பற்றித் தமிழக அரசு விளக்கம்

சென்னை, டிச. 26—

மின்சாரக் கட்டணச் சீரமைப்புப் பற்றித் தமிழக அரசு விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு :—

' தமிழ்நாடு மின்வாரியம் வழங்குகின்ற மின்சாரத்திற்கு உரிய கட்டணங்கள் 1964-ம் ஆண்டு டிசம்பரில் கடைசியாக மாற்றியமைக்கப்பட்டது ; அதுமுதல் கூலி உயர்வுக்கான வாரியத்தின் தீர்ப்புக்கு இணங்கத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு தரப்பட்டதாலும்--சாதனங்களின் விலை உயர்வு அதிகரித்ததாலும்--- வேறு பல காரணங்களினுலும் மின்சார வாரியத்தின் நடைமுறைச் செலவுகள் அதிகரித்துவிட்டன.

''பயன்படுத்துவோரின் தேவையை முழுமையாக நிறைவு செய்யவும்--மின்சார வெட்டு ஏற்படாமல் தவிர்க்கவும் மின்சார வாரியம் கேரளத்திலிருந்தும்--மைசூரிலிருந்தும் அதிக விலை கொடுத்து மின்சாரம் பெற வேண்டியிருக்கிறது.

'1968-ம் ஆண்டுமுதல் நெய்வேலி மின் நிலையத்திலிருந்து கிடைக்கப்பெறும் மின்சாரத்தின் விலையும் உயர்ந்துவிட்டது.

' இவைகளின் விளைவாக, 1965-ம் ஆண்டு முதல் உயர் அழுத்த மின்சாரக் கட்டணம் 40 சதவிகிதமாகவும், குறைந்த அழுத்த மின்சாரக் கட்டணம் 53 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

''நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாகவும், திட்டத்திற்கு ஒதுக்கிய நிதி குறைக்கப்பட்டதாலும் மின் வாரியமும்-- மாநில அரசும் அவற்றின் திட்டங்களை நிறைவேற்றத் தங்களது வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு உந்தப்பட்டன.

''எனவே, மின்வாரியம் வழங்குகின்ற மின்சாரத்திற்குரிய கட்டணத்தைத் திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. அப்படித் திருத்துவதற்கு முன்னர், மின்சாரக்கட்டணங்களைப்பற்றி ஆராய அரசால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளையும்,குறிப்பாகப் பொருளாதார நிபுணர் டாக்டர் பி. நடராசன் தலைமையில் அமைக்கப்பட்ட துணைக் குழுவின் பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு மின்சாரக் கட்டணங்கள் கீழ்க் கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன :—

தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் உயர் அழுத்த மின்சாரக் கட்டண விகிதம் 10 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது ; (அனல் மின்சார)தெர்மல் ஏரியாவில் நடைமுறையிலுள்ள எரிபொருள் சர்சார்ஜ்--ஹைடல் ஏரியாவிலுள்ள 30 சதவிகித சர்சார்ஜும் இந்தக் கட்டணத்தில் இணைக்கப்படும்.

உயர் அழுத்தத் தொழில்களுக்கான மின்சாரக்கட்டணம்,உரிய கட்டணத்திற்கு மேலாக இப்பொழுது விதிக்கப்படும் 20 சதவிகித உயர்வு 25 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

வேளாண்மைக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு (வரிகள் உட்பட) தற்பொழுது விதிக்கப்படும் கட்டணம், ஒரு யூனிட்டுக்கு 10.8 காசிலிருந்து 12 காசாக மாற்றப்பட்டுள்ளது.

குறைந்த அழுத்த முனையில், ஒரு யூனிட்டு மின்சாரத்தின் விலை 20 2 காசாக இருக்கின்ற காரணத்தினல் இந்த உயர்வு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கட்டணங்களை உயர்த்திய பிறகும், வேளாண்மைக்காக வழங்கப்படுகின்ற மின்சாரத்தின் வாயிலாக மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 8 கோடி நட்டம் ஏற்படும்.

பிற மாநிலங்களில் விதிக்கப்படுகின்ற கட்டணம், தமிழ்நாட்டில் இப்பொழுது உயர்த்தப்பட்டுள்ள கட்டணத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுப் பயனுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்திற்குரிய கட்டணம் -- முதல் 500 யூனிட்டுகளுக்கு -- 45 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (தற்பொழுது விதிக்கப்படும் கட்டணம் முதல் 100 யூனிட்டுக்கு 43 35 காசாகவும், அடுத்த 400 யூனிட்டுக்கு 40.80 காசாகவும் உள்ளது).

500 யூனிட்டுகளுக்குமேல் செலவு செய்யப்படும் மின்சாரத்திற்கு 40 காசாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது (தற்பொழுது விதிக்கப்படும் கட்டணம் 500-லிருந்து 2000 யூனிட்டுவரை ஒரு யூனிட்டு 38 25 காசாகவும்; 2500 யூனிட்டுக்குமேல் செலவு செய்யப்படும் மின்சாரத்திற்கு யூனிட்டு ஒன்றுக்கு 33.15 காசாக உள்ளது).

'பவர் லோடு'க்கு வரிகள்--துணை வரிகள் உட்பட -- யூனிட்டுக்கு 19 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (தற்பொழுதுள்ள விகிதம் முதல் 2000 யூனிட்டுகளுக்கு யூனிட்டு ஒன்றுக்கு 16.20 காசும் 2000 யூனிட்டுக்குமேல் செலவு செய்யப்படும் மின்சாரத்திற்கு யூனிட்டு ஒன்றுக்கு 14 25 காசும் விதிக்கப்படுகின்றது).

'லைட்டிங்' மற்றும் 'பவர் லோடிற்கும்' சேர்த்த கட்டணம் வரிகளும் -- துணை வரிகளும் உட்பட -- ஒரு யூனிட்டுக்கு 33 காசு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது ; தற்பொழுது விதிக்கப்படும் கட்டணம் 28.05 காசாக விதிக்கப்படுகின்றது.

எல்லா 'ஹைடென்சன்' மின்சாரத்திற்கும் மின்சார வரியில் 50 சதவீதம் இக்கட்டணத்தில் இணைக்கப்படும் ; மிகுதியான 50 சதவீதம் வரியாக தொடர்ந்து இருக்கும்.

திருத்தப்பட்ட இந்தக் கட்டணங்கள் 1—1—72 அன்றும் அதற்குப் பிறகும் மீட்டர் ரீடிங் எடுக்கப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

பேச்சாளர் முகவரி

க. சு. மணிமாறன்,
அண்ணு இல்லம்,
65, கருவேலன்குண்டு தெரு,
திருநெல்வேலி-6.

ரசாக்கர்களை விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள்

இன்னமும் பலர் பதுங்கியிருப்பதாகத் தகவல்

சில்ஹெட், டிச. 27—

வங்கதேச மக்களைப் படுகொலை செய்த பாகிஸ்தான் இராணுவத்துக்கு உதவியாகச் செயல்பட்ட ரசாக்கர்கள் போன்ற குற்றவாளிகளை விசாரிக்க மாவட்டத் தலைநகர்களில் விசாரணை மன்றங்களை நிறுவுவது என்று வங்க தேச அரசு முடிவு செய்திருக்கிறது.

'ஜமீயத்--இ--இஸ்லாம்' என்னும் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகளான 'அல்பதார்' இயக்கத்தினர் இன்னமும் கிராமப் பகுதிகளில் செயல்பட்டுவருவதாக சில்ஹெட் மாவட்ட சிவில் நிர்வாக அமைப்பாளர் தெரிவித்தார்.

சில்ஹெட்டில் மட்டும் இவர்களைப் போன்ற ரசாக்கர்கள் 7 000 பேர் இருப்பதாகவும், அவர்களில் 2,000 பேர் மட்டுமே பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

'நிர்ப்பந்தம்' காரணமாக ரசாக்கர்களாகப் பதிவு செய்து கொண்டவர்களை ரூ. 10,000 முதல் ரூ. 20,000 வரை சொந்த ஜாமீனில் விட்டுவிடலாம் --- என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

வங்க தேசத் துரோகிகள்

இரண்டாவது பட்டியல் தரும் தகவல்

டாக்கா, டிச. 27—

பாகிஸ்தான் இராணுவத்துக்குத் துணை நின்று செயல்பட்டவர்களின் இரண்டாவது பட்டியலை வங்க தேச அரசு நேற்று வெளியிட்டது.

டாக்கா பல்கலைக் கழகத் துணை வேந்தர் உட்பட 9 பேர்களின் பெயர்கள் இதில் காணப்படுகின்றன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

29--12--71

திருவானைக்காவல்

திருச்சி வட்ட தி.மு.க. சார்பில் வங்காள தேச விடுதலைவிழா; மாலை 6·30 மணிக்கு சன்னதித் தெருவில்; தலைவர்: மு. நடராசன்; பேசுவோர்: அமைச்சர்: நாவலர் இரா. நெடுஞ்செழியன், ஜி. ஸ்ராங்குசம் எம்.எல்.சி., கு காமாட்சி எம். எல். ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., எம்.எஸ். வெங்கடாசலம், எஸ். ஏ.ஜி. ராபி, நடிகர் சௌந்தரராசன், எஸ்.எம்.வி. சாமி, சு. நெடுமாறன் மற்றும் மலர்.

கலைஞர் பேருந்து நிலையத் திறப்பு விழா

அறந்தாங்கி பேரூராட்சிமன்றத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள டாக்டர் கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையத்தை, வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் திறந்துவைப்பார்; இவ்விழா, 28—12—71 காலை 11-மணிக்கு, பொதுப்பணி அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் தலைமையில் நடைபெறும்; பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் படங்களை முறையே இரா. இராசனும், இரா. துரைமாணிக்கமும் திறந்துவைப்பர்; திரு. ஆ. துரையரசன் வரவேற்புரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (34, [illegible] செங்குத் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பாகிஸ்தான் இராணுவத்தின் மிருக வெறியாட்டம்

தினஜ்பூரில் காணப்பட்ட பிணக் குவியல்

தினஜ்பூர், டிச. 27—

பெண்கள் -- குழந்தைகள் உட்பட சுமார் 300 பேர்களின் சடலங்களும் -- மண்டையோடுகளும் இங்குள்ள குழி ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் இராணுவம் சரணடைவதற்குமுன் இவைகளை இங்கு கொண்டுவந்து போட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

இங்குள்ள நகர மண்டபத்தின் அறைச் சுவர்களில் இரத்தக் கறைகள் படிந்திருப்பதைக் கண்டதாக அங்கு சென்ற நிருபர்கள் தெரிவித்தனர்; இந்த அறையில் ஏராளமான பெண்களைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் அடைத்து வைத்திருந்ததாக இப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் தெரிவித்தனர்.

சில சடலங்கள் ஒரு மாந்தோப்பிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பொருளாதாரம்

நிலைமையைச் சமாளிக்கப் புதுப்புது வரிகள்

ஜலந்தர், டிச. 27—

பாகிஸ்தான் பாங்கிகளில் கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர்கள் மீது புதிய வரி ஒன்று விதிக்கப்பட்டிருக்கிறது.

கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர் பயன்படுத்தும் ஒவ்வொரு 'செக்'குக்கும் 20 காசு வரி, டிசம்பர் 1-ந் தேதிமுதல் விதிக்கப்பட்டிருக்கிறது.

இத்துடன், 10 தாள்கள் அடங்கிய ஒவ்வொரு 'செக்' புத்தகத்துக்கு ரூ 2 வீதம் மற்றொரு வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பதனாலேயே இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனராம்.

தமிழக அரசுக்கு மத்திய அமைச்சர் பாராட்டு

எல்லா நகரங்களையும் இணைக்க இரயில் பாதை

பொன்மலை இரயில்வே அடிக்கல் நாட்டு விழாவில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் யோசனை

திருச்சி, டிச. 27—

தமிழகத்தில் நிலையான ஆட்சி அமைந்திருப்பதற்கும் -- நெருக்கடிக் காலத்தில் மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தந்து செயல்படுவதற்கும், தி. மு. கழக அரசையும் -- அமைச்சர்களையும் இரயில்வேத்துறை அமைச்சர் அனுமந்தையா பாராட்டினர்.

ரூ. 1 கோடி செலவில் பொன்மலையில் அமையவிருக்கும் டீசல் லோகோ ஷெட்டுக்கு அடிக்கல் நாட்டி அனுமந்தையா பேசினர்.

இந்த நிகழ்ச்சிக்கு கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

அவர் பேசும்போது, 'சென்னைக்கும்—திருச்சிக்கும் இடையே அகல இரயில் பாதை அமைக்கவேண்டும்' என்று யோசனை தெரிவித்தார்.

"மின்சார இரயில் வசதி, விழுப்புரத்திலிருந்து நீடிக்கப்பட வேண்டும்" என்றும் அவர் கோரினர்.

நாவலர் அவர்கள் மேலும் பேசுகையில், "சேதுசமுத்திரத் திட்டமும் -- தூத்துக்குடித் துறைமுகமும் விரைவில் நிறைவேற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மற்ற எல்லா மாநிலங்களையும் விடத் தமிழகத்தில் நகரங்கள் அதிகமாக இருப்பதாக நாவலர் தெரிவித்தார்; 'இங்கு 443 நகரங்கள் இருக்கின்றன; இவைகள் எல்லாவற்றுக்கும் இடையே இணைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்' என்று அவர் கேட்டுக்கொண்டார்.